# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 10.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 5454/SCIC/2023**

திரு.R.புண்ணியமூர்த்தி த/பெ.மு.க.இராமசாமி
எண்.5/91E, பட்டுக்கோட்டை சாலை ... மேல்முறையீட்டாளர்
கந்தர்வக்கோட்டை,
புதுக்கோட்டை மாவட்டம்.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ....... பொதுஅதிகார அமைப்பு
வட்டாட்சியர் அலுவலகம்
தஞ்சாவூர் மாவட்டம்.

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 10.12.2022 |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 20.02.2023 |
| 3. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 27.03.2023 |
| 4. | ஆணையத்தின் அறிவிப்பு | 17.05.2023 |
| 5. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 31.01.2025 |
| 6. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 07.02.2025 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / வட்ட ஆட்சியர், வட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “தஞ்சாவூர் மாவட்டம் வல்லம்புதூர் சேத்தி கிராமம் புல எண்.236/1B1-ன் இருந்து மாறுதல் 236/1B2 நாள் 31/10/2022 மாற்றப்பட்டவர்கள் பெயர் 1.ஜோதிவேல் மனைவி பழனிமாணிக்கம் (2) நடராஜன் மனைவி செல்வி இவர்கள் பெயரில் மாற்றியுள்ளீர்கள். இவை எதன் அடிப்படையில் மாறுதல் செய்யப்பட்டது என்பதை A முதல் Z வரையும் நகல் ஜெராக்ஸ் வழங்க பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்” எனக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (10/06/2025) விசாரணைக்கு மனுதாரரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு M.மதியழகன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், தஞ்சாவூர் வட்டம் அவர்கள் ஆஜரானார். ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின் 10/12/2022 தேதியிட்டு பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு அப்போதைய (10/12/2022 தேதிய) பொதுத் தகவல் அலுவலர் திரு.கண்ணன், (தற்போது) தலைமை எழுத்தர், “D” பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், தஞ்சாவூர் மாவட்டம் அவர்கள் எவ்வித தகவலையும் மனுதாரருக்கு வழங்கவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, மேற்சொன்ன திரு.கண்ணன் என்பவர் மீது பிரிவு 20(1) மற்றும் பிரிவு 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் பெற்று அதனை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**3. இன்றைய விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு 31/01/2025 தேதியிட்டு சரியான தகவலையும், ஆவணங்களின் நகல்களையும் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். விசாரணையின்போதும், மேற்குறிப்பிட்ட தகவல்களின் நகல்களைக் கொண்டு வந்திருந்து, ஆணையம் உத்தரவிட்டதன் பேரில் அதனை மனுதாரரிடம் வழங்கினார். மேலும், பொதுத் தகவல் அலுவலர், தமது அலுவலக ஆவணங்களின்படியான உரிய தகவல்களையும், ஆவணங்களின் நகல்களையும் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். அதனை பரிசீலனை செய்து, ஆணையம் ஏற்கிறது. எனவே, இத்துடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 5454/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
தஞ்சாவூர் மாவட்டம்.

**மேல்முறையீட்டாளர்**

திரு.R.புண்ணியமூர்த்தி த/பெ.மு.க.இராமசாமி
எண்.5/91E, பட்டுக்கோட்டை சாலை
கந்தர்வக்கோட்டை,
புதுக்கோட்டை மாவட்டம்.

RG/PC